**வாசிக்க**: **தானியேல்** 9:1-23

**நீ எனக்கு மிகவும் பிரியமானவன்**

தானியேல் தரியு ராஜாவின் நாட்களில் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபதுவருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்து கொண்டபடியால். உடனே உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேடினான்.

தேவசமூகத்தில் வந்து அவரை துதித்து, ஜெபம்பண்ணி, தன் பாவத்தையும் தன் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, தன் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக விண்ணப்பங்கள் ஏறெடுத்து, தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்து கொண்டிருந்தான். அப்படி ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும் போதே, தரிசனத்தில் காபிரியேல் என்னும் தேவதூதன் தோன்றி தானியேலோடு பேசி, தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன் என்றான். பின் தானியேலை பார்த்து நீ மிகவும் பிரியமானவன். ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்கவந்தேன். இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்.

**கேள்வி**:

தாவீதுக்கடுத்து பிரியமானவன் என பெயர் பெற்ற தானியேலுக்குள் இருந்த விசேஷங்கள் என்ன..?

**பதில்**:

தானியேலின் சிறப்பம்சங்கள் :

1) தானியேலும் தாவீதை போலவே சிறுவயதிலே மிகவும் கடினமான பாதைகளை கடந்து வந்தான். 2)அடிமையாக பாபிலோனில் இருந்தாலும் ஆண்டவருக்கு பிரியமாக வாழ அர்ப்பணித்தான்.

3) அரசபதவி வந்தபோதும் ஆண்டவருடைய நாமத்தையே உயர்த்தும் மனிதனாக வாழ்ந்தான்.

5) தான் உயர்ந்த போது தன் நண்பர்களையும் நினைத்தான்

6) தன் உயிரையும் துச்சமாக நினைத்து தேவனுக்கு பிரியமாகவே வாழ்ந்தான்.

7) வேதவசனங்களை ஆராய்ந்து பார்த்து அதிலுள்ள தீர்க்கதரிசனங்களை விசுவாசித்து அதற்காக ஜெபித்தான்.

பிரியமான தம்பி தங்கச்சி இன்னும் அநேக காரியங்கள் உள்ளன. ஆனால் எல்லாம் ஆண்டவர் அவனுக்கு கற்று தந்தவைகளே. முதல்காரியத்திற்கு கீழ்படிந்தபோது மற்றவை ஒன்றன்பின் ஒன்றாக வரும். அவர் கற்று தருபவதை செய்துகொண்டிருந்தால் அவருக்கு பிரியமானவனாக வாழ்ந்திடலாம். நீங்களும் அவர் சத்தத்தை கேட்டு கீழ்படிவீர்களா...?

அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ?

1 சாமுவேல் 15 :22

**ஜெபம்**

சர்வவல்லமையுள்ள தகப்பனே! தானியேலை போல பரிந்து பேசி ஜெபிக்கும் பிள்ளைகளாக இருக்க வாஞ்சை கொள்ளுகிறோம். முழங்காலில் நின்று ஜெபிக்கும் ஆவியை தாங்கப்பா. ஆமென்